# மெட்ரோ ரயில் நிலையங்களில் மின்னணு பலகை அமைப்பு

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரயில் நிலையங்களில் மெட்ரோ ரயில்களின் வருகை மற்றும் புறப்பாடு நேரங்களை அறிந்து கொள்ளும் வகையில் மின்னணு திரைப்பலகைகள் முதல்கட்டமாக விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மெட்ரோ ரயில் நிலையங்களிலும் இதுபோன்று அமைக்கப்படும். மெட்ரோ ரயில் நிலையங்களின் அருகே உள்ள பேருந்து நிறுத்தங்களிலும் மின்னணு பலகைகள் அமைக்க திட்டம் உள்ளது.